சாவகச்சேரி பிரதேசசபை

யாழ்ப்பாண மாவட்டம்

---------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 22 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்ரெம்பர் 22 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சாவகச்சேரி பிரதேசசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------

கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------

ை. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 261இ790 | | - |
| அதிகரித்துக் கூறல்கள் | | | 05 | 662இ968 |

ii. மாகாண சபைகள்இ உள்;ராட்சி அமைச்சினால் மீளாய்வாண்டில் சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட றீசுனு -4359 இலக்க உழவு இயந்திரத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு இறுதிக்கணக்குகளில் வெளிப்படுத்தப்படாமையால் மோட்டார் வாகனங்களும் வண்டிகளினதும் பெறுமதி கணக்குகளில் குறைத்துக் கணக்கிடப்படுகிறது.

iii. கொடிகாமம் பலநோக்கு மண்டப காணிகட்டிட பெறுமதி மதிப்பிடப்பட்டு இறுதிக்கணக்குகளில் வெளிப்படுத்தப்படாமையினால் காணி கட்டட பெறுமதி கணக்குகளில் குறைத்து கணக்கிடப்பட்டுள்ளது.

1.3.2 இணக்கமின்மைகள்

-----------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| <u>சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு</u> | <u>விபரம்</u> |
|---|---|
| 1989 ம் ஆண்டின் நிதி நிர்வாக ஒழுங்க விதி | |
| அத்தியாயம் ஐஐ பிரிவு 66 | வருமான நிலுவை ரூபா 982இ508 வினை அறவிட சபையின் செயலாளரால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி<br>இவக்கம் 571 | இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 1இ608இ925 பெறுமதியான வைப்புக்களிள் மீது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரிவு 152(ஏ) | உபசரணை செலவினம் ரூபா 1000 விஞ்சும் பொழுது அமைச்சின் முன் அனுமதி பெறவேண்டி இருந்தும் அனுமதியின்றி சபை நிதியில் இருந்து ரூபா 36இ880 செலுத்தப் பட்டுள்ளது. |

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 13இ368இ554 பெறுமதியுடைய 2 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------------

2.1 நிதிசார் விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 3இ451இ144 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவின மிகையாக ரூபா 3இ139இ405 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

----------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 4இ145இ144 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 5இ435இ340 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடியான து | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா'000 | ரூபா '000 |
| i. இறைகளும் வரிகளும் | 110 | 142 | 908 |
| ii. குத்தகை வாடகைகள் | 10இ462 | 10இ724 | 66 |
| iii. அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2இ117 | 2இ378 | 6 |
| iv. வேறு வருமானங்கள் | 35இ163 | 38இ752 | 2 |

2.3.2 வருமான முகாமைத்துவம்

---------------------------------

i. ரூபா 90இ823இ422 பெறுமதியான வீதவரிகள் நிலுவையினை அறவீடுவதற்கு ஆக்கபூர்வமானதும் சட்டரீதியானதுமாக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

ii. கடந்த 10 வருடங்களுக்கு மேலாக சபையின் எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு ஆதன மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்படாமையால் ஆதனவரி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது

2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம்.

---------------------------------

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றத்திடமிருந்து மீளாய்வாண்டிற்கு கிடைக்கப் பெற வேண்டிய 2012இ2013 ஆண்டுக்கான நீதிமன்றத் தண்டப்பணங்கள் மற்றும் குற்றப்பணத்திற்கான பட்டியல் ரூபா 6இ424இ300 சபைக்கு கிடைக்கப் பெற்றிருந்தும் வருமதியாக கணக்குகளில் கணக்கிடப் பட்டிருக்கவில்லை.

2.3.4 முத்திரைத் தீர்வை கட்டணம்

---------------------------------------

(அ) 2006இ 2007இ 2010இ 2011 மற்றும் 2012 ம் ஆண்டுகளுக்கு காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பட்டியல் கிடைத்து பெறவேண்டிய முத்திரைத் தீர்வை கட்டணங்கள் ரூபா 43இ972இ590 வருமானமாகவோ வருமதியாகவோ இறுதிக்கணக்குகளில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ). 2013 ம் ஆண்டிற்கான முத்திரைத் தீர்வை கட்டண பட்டியல் காணிப்பதிவாளர் நாயகத்திடம் இருந்து அறிக்கையிடும் திகதி வரையும் கிடைக்கப் பட்டிருக்கவில்லை.

2.3.5 அறவிட வேண்டிய ஊழியர் கடன்

-------------------------------------------------------

கடந்த 05 வருடங்களுக்கு மேலாக இறந்த பதவிபறிக்கப்பட்ட அலுவலர்களிடமிருந்து அறவிடவேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 10இ819 பிணையாளரிடமிருந்து அறவிடுவதற்கு எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்து முகாமைத்துவம்

-----------------------------------------

2.4.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

-----------------------------------------------------

1. சபையிலுள்ள நான்கு வாகனங்கள் பயன்பாடின்றி வாகனதரிப்பிடத்தில் காணப்படுவதனை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

11. சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 260இ890 பெறுமதியான மூலதனப் பொருள்கள் இன்றுவரை பயன்பாடின்றி களஞ்சியத்தில் காணப்படுகின்றது

2.5 கணிப்பீட்டுச் சபை அறிக்கை

----------------------------------------------

சபையின் 2013 ம் ஆண்டுக்கான கணீப்பீட்டுச் சபை அறிக்கையின் பிரகாரம் தலைமை அலுவலக இருப்புப் பதிவேட்டுடன் ஒப்பிடும் போது 10 எண்ணிக்கையான பொருள்களில் குறைவும் 16 எண்ணிக்கையான பொருள்களில் மேலதிகமும் காணப்படுகிறது

2.6 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------

2.6.1 செயற்திட்டம் நிறைவேற்றுவதில் காலதாமதம்

--------------------------------------------------------------------------

(அ)சபையின் ரூபா 5இ793இ020 பெறுமதியான 37 வேலைகள் வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்படாது வருட இறுதியில் ஆரம்பிப்பதினால் மூலதன வேலைகள் நிதியாண்டிற்குள் முடிக்கப்படாமையால் சில்லறைக்கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ)2011, 2012 ம் ஆண்டுகளில் சில்லறைக்கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 450இ000 பெறுமதியான 2 மூலதன வேலைகள் அறிக்கையிடும் திகதி வரையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

2.6.2 கைவிடப்பட்ட செயற்திட்டம்

--------------------------------

மீளாய்வாண்டில் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபா 1இ400இ000 பெறுமதியான 08 மூலதன வேலைத்திட்டங்கள் முற்றாக கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

2.6.3 அங்கீகரிக்கப்படாத மூலதன வேலையும் செலவினமும்

------------------------------------------------------------------

மீளாய்வாண்டில் வரவு செலவுத்திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத 04 மூலதன வேலைகளின் பெறுமதி ரூபா 1இ750இ000 மீளாய்வாண்டு காலத்தில் சபைநிதியில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### 2.6.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

உள்;ராட்சி ஆணையாளர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட நன்கொடைகள் ரூபா 183இ719 குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது நானாவித வைப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருப்பது மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்க முடியாது போனமையினை காட்டுகின்றது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாடுகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வீத வரி அறவீடு
ii. சொத்து மதிப்பீடு
iii. வரவு செலவுத்திட்டம்
iv. வாகனங்களின் பயன்பாடு
v. கணக்கீடு
vi. மீளளிக்கக்கூடிய நானாவித வைப்புக்கள்